(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**.208/2017 அ.சா.11

Name : அமீனா
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 19.12.2022.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மதுரை அய்யர்பங்களாவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ஷாகுல்ஹமீது என்னுடைய தம்பி ஆவார். அவர் என்னுடன் தான் ரேஸ்கோர்ஸ் காலனியில் இருந்து வந்தார். ஆஜர் எதிரிகள் அனைவரும் இறந்து போன ஷாகுல்ஹமீதின் நண்பர்கள் ஆவார்கள். கடந்த 22.09.2014 ம் தேதியன்று இரவு சுமார் 11 மணியளவில் ஆஜர் எதிரிகள் எனது தம்பியை வந்து எங்கே காணோம் என்று கேட்டார்கள். நான் வெளியே போய்விட்டான் என்று சொன்னேன். எங்ககே போய்விட்டான் என்று மிரட்டினார்கள். எங்களுக்குள் பிரச்சனை என்றும் மிரட்டிவிட்டு சென்றுவிட்டனர். அதன்பிறகு 26.09.2014 ம் தேதி இரவு 9 மற்றும் 10 மணியளவில் நாகமலை புதுக்கோட்டை காவல்ஆய்வாளர் அவர்கள் வந்து எனது சகோதரரின் அடையாள அட்டையை காண்பித்து என்னிடம் கேட்டார்கள் நான் என்னுடைய தம்பி தான் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் என்னுடைய தம்பி கொலையுண்டு இறந்து விட்டதாகவும், ராஜாஜி அரசு மருத்துவமனையில் இருப்பதாகவும், என்னை அடையாளம் காட்டும்படி கூறினார்கள். நான் மருத்துவமனைக்கு சென்று அடையாளம் காண்பித்தேன். மேற்படி சம்பவம் குறித்து என்னுடைய சகோதரர்களிடம் தகவல் சொன்னேன். அவர்களும் மருத்துவமனைக்கு வந்தார்கள். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் இரண்டு முறை விசாரணை செய்தார்கள். எந்தெந்த தேதிகளில் என்னை விசாரணை செய்தார்கள் என்று என்னால் சொல்ல முடியும். போலிசார் என்னை இரண்டுமுறையும் என்னுடைய வீட்டில் வைத்து தான் விசாரணை விசாரித்தார்கள். ஒரே நாளில் இரண்டுமுறை விசாரணை செய்தார்கள். அன்றே இரவு 9 மணிக்கு ஒரு முறையும், 10.30 மணிக்கு ஒரு முறையும் விசாரணை

செய்தார்கள். அவ்வாறு இரண்டு முறை என்னை விசாரணை செய்தது 26.09.2014. கடந்த 22.09.2014 ம் தேதியன்று இரவு சுமார் 11 மணியளவில் ஆஜர் எதிரிகள் எனது தம்பியை வந்து எங்கே காணோம் என்று கேட்டார்கள் என்றும், நான் வெளியே போய்விட்டான் என்று சொன்னேன். எங்கசே போய்விட்டான் என்று மிரட்டினார்கள். எங்களுக்குள் பிரச்சனை என்றும் மிரட்டிவிட்டு சென்றுவிட்டனர் என்ற விபரத்தை நான் போலிசார் விசாரணையில் இரண்டு முறையும் கூறியுள்ளேன். 26.09.2014 ம் தேதியன்று என்னை சந்தித்த ஆய்வாளர் பெயர் எனக்குத் தெரியாது. 22.09.2014 ம் தேதியன்று ஆஜர் எதிரிகள் என்னுடைய வீட்டில் வந்து என்னை மிரட்டியது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேனா என்றால் இல்லை. இறந்து போன என்னுடைய தம்பி பெயரில் கூடல்புதூர், எஸ்.எஸ்.காலனி, திடீர்நகர், தல்லாகுளம் ஆகிய காவல்நிலையங்களில் பலதிருட்டு வழக்குகள் இருந்து விபரம் எனக்கு நேரடியாகத் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய தம்பி திருட்டு வழக்குகளில் சிறை செல்லும் போது நான் தான் ஜாமீன் எடுத்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாகவோ, சம்பவத்திற்கு பின்னரோ நீதிமன்றத்தில் தற்போது ஆஜராகியுள்ள எதிரிகளை நான் பார்க்கவில்லை. 22.09.2014 ம் தேதியன்று எதிரிகள் தான் வீட்டிற்கு வந்தார்களா என்று நான் பார்த்தேனா என்றால் இரவு இருட்டு என்பதால் நான் சரியாக பார்க்கவில்லை. நான் 26.09.2014 ம் தேதியன்று இரவு 9.30 மணியளவில் மதுரை அரசு மருத்துவமனைக்கு உள்ளே சென்றேன். 11.30 மணியளவில் வெளியே வந்துவிட்டேன். எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் அவ்வளவாக தெரியாது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகள் என்னை மிரட்டவில்லை என்றும், வழக்கிற்காக மிரட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.